


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (3.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.பி. முருகையன் சந்தித்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களின் நலன் சார்ந்த அரசாணைகளை வெளியிட்டதற்கு நன்றி தெரிவித்து கோரிக்கை மனு அளித்தார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் சி. குமார், தமிழ்நாடு கிராம நிருவாக முன்னேற்ற அலுவலர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் அ. பூபதி, தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றியத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் அண்ணா குபேரன், தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் எஸ். ரவி ஆகியோர் உடனிருந்தனர்.

### அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன்!

# ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடர மக்கள் விருப்பம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 5–

திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும் என்பதே மக்கள் விருப்பமாக உள்ளது என்று அவர்களுடன் அலைபேசியில் பேசும்போது தெரிந்துகொண்டதை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களையும் எண்ணங்களையும் ஒருங்கிணைத்திட ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் ஈடுபட்டுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்களைத் தொடர்பு கொண்டு பேசினேன்.**

**அவினாசி ஒன்றியத்தில் மக்களுடன் இருந்த திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ந.தினேஷ்குமார் அவர்கள், அங்கிருந்த மக்களிடம் அலைபேசியை வழங்க, “தமிழ்நாடு தொடர்ந்து தலைநிமிர்ந்து நடைபோட, திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திட வேண்டும்” என்ற தங்களது விருப்பத்தை உற்சாகத்தோடு என்னிடம் வெளிப்படுத்தினர்!**



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கம் ஊரெங்கும் தொடக்கம்; உற்சாக வெள்ளத்தில் தமிழ் மக்கள்!







கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த “ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் கீழ், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மீர்சாகிப்பேட்டை பகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.7.2025) வீடு, வீடாகச் சென்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி, உறுப்பினர் சேர்க்கையை மேற்கொண்டார். இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பொதுக்குழு உறுப்பினர் திருமதி.வே.கமலா செழியன், திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், வட்டச் செயலாளர் க.வே.மோகன் உள்பட நிர்வாகிகள், இளைஞரணியினர் கலந்து கொண்டனர்.



”ஓரணியில் தமிழ்நாடுகழக உறுப்பினர் சேர்க்கும் திட்டத்தின் கீழ் ஆலந்தூர் வடக்கு பகுதி, 161–வது வட்டம், பூத் எண்280, ராஜா தெருவில் கழகப் பொருளாளர் – கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர் படிவம் மற்றும் மக்களுடன் ஸ்டாலின் APP மூலம் கழக உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அருகில் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், வட்டச் செயலாளர் எம்.ஆர்.சீனிவாசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முடிவைத்தானேந்தல் ஊராட்சியில் “ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தொடக்கி வைத்து, வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் குறித்து எடுத்துரைத்து, தி.மு.க.வில் இணையுமாறு அழைப்பு விடுத்தார். இந்த நிகழ்வில், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



சேலத்தில் அ.தி.மு.க. பகுதிச் செயலாளர் அபு என்கிற மகபூப் அலி தலைமையில் 150–க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

### சேலத்தில் அ.தி.மு.க. பகுதிச் செயலாளர் உள்பட

# 150க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில்!

சேலம், ஜூலை 5–

சேலத்தில் அ.தி.மு.க. பகுதி செயலாளர் தலைமையில் 100 இஸ்லாமிய பெண்கள் உள்பட 150க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் அ.தி.மு.க.வில் இருந்து விலகி சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் முன்னிலை யில் தி.மு.க.வில் இணைந்தனர்

இஸ்லாமியர்களின் நலனில் அக்கறை கொண்ட தலைவராக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து வருவதாக அமைச்சர் ராஜேந்திரன் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றி வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை கண்டு மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக சேலம் மாநகர் மாவட்டம் அம்மாபேட்டை பகுதி அதிமுக செயலாளராக பணியாற்றி வந்த அபு என்கிற மகபூப் அலி தலைமையில் அதிமுக சிறுபான்மை பிரிவு மாவட்ட இணை தலைவர் ரியாசுதீன் இணைச் செயலாளர் அப்துல் காதர், அதிமுக தகவல் தொழில்நுட்ப அணி பகுதி செயலாளர் முகமது ஹனிபா உள்ளிட்ட பல்வேறு வார்டு துணை செயலாளர்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் அதிமுகவிலிருந்து விலகி திமுகவில் இணையும் நிகழ்ச்சி சேலம் மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் மாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் கலந்துகொண்டு அ.தி.மு.க. விலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்த அ.தி.மு.க. பகுதி செயலாளர் உள்ளிட்ட அனைவருக்கும் கழக துண்டை அணிவித்து வரவேற்றார்.

மேலும் நிகழ்ச்சியில் அமைச்சர் ராஜேந்திரன் பேசும்போது, சிறுபான்மையின மக்களுக்கு என்றும் பாதுகாக்கும் இயக்கமாக தி.மு.க. திகழ்ந்து வருவதாகவும், இஸ்லாமியர்களுக்கு பாதிப்பு என்று வந்தால் முதல் குரல் கொடுக்கும் தலைவராக தமிழ்நாடு முதலமைச்சர் உள்ளார் என்று கூறிய அவர், மகளிர்காகவும் மாணவ மாணவியர்களுக்காகவும் இஸ்லாமியர்களுக்காகவும் தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றிய திட்டங்களை பொதுமக்களிடையே எடுத்துரைக்கும் பணியில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், நாசர்கான் சேலம் மாநகர செயலாளர் ரகுபதி பகுதி செயலாளர் இப்ராஹிம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.